1995 ஏப்ரல் 21]

394—

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சமாதியில் அருங்காட்சியகம்

26809*—திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சமாதியில் அருங்காட்சியகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடமாடும் பேசும் தெய்வமாக உலவிக்கொண்டு, அவர்களை நோக்கி யார் எந்தத் தேவைகளைக் கேட்டாலும் மாரிபோல் வாரி வழங்கக்கூடிய மனப்பக்குவத்தைப் பெற்று, நேற்றையதினம் 10 கோடி ரூபாய் அளவு உள்ள நிலத்தைத் திரைப்படத் தொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கி, சரித்திரம் படைத்து, இப்போது சகாப்தமாக உயர்ந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே, புரட்சித் தலைவிக்கு புகழ் சேர்க்கக்கூடிய விதத்திலே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சமாதியிலே அருங்காட்சியகம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்ற பதிலைக் கொடுத்ததற்கு மாண்புமிகு இதய தெய்வத்தினுடைய பொற்பாதங்களிலே நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். இந்த அருங்காட்சியகம் எப்போது ஆரம்பிக்கப்படும்? எந்த இடத்தை அதற்காகத் தேர்வு செய்திருக்கிறார்கள்? எந்தக் காலக் கட்டத்திற்குள்ளாக அது நிறைவேற்றப்படும்? அதற்காக தொகை ஏதேனும் ஒதுக்கப்பட்டு இருக்கிறதா? இப்படிப்பட்ட செயற்குறிப்புகள் அரசிடம் என்னென்ன உள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய புகழ் இந்த மண்ணிலே நிலைக்கத்தக்க அளவுக்கு இதய தெய்வம் தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பல்வேறு பணிகளை, செயற்கரிய பணிகளைச் செய்து

வருகிறார்கள் என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அருங்காட்சியகம், புரட்சித் தலைவருடைய நினைவிடத்திற்குப் பின்புறத்திலே அமைக்கப்படுவதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. பொதுப்பணித் துறையிடமிருந்து திட்ட மதிப்பீடும், வரைபடங்களும் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன். 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே இந்த அருங்காட்சியகம் அமைக்கப்படும். எவ்வளவு விரைவில் அமைக்கப்பட முடியுமோ, அவ்வளவு விரைவில் இந்தப் பணி செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்களுடைய கனவுகளை நினைவாக்கக்கூடிய அரசாக, 'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல்' என்பதற்கு ஏற்ப, தன்னிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிற 234 தொகுதிகளையும், சீரோடும் சிறப்போடும், பேரோடும் புகழோடும் காத்து வருகின்ற, புரட்சித் தலைவி அவர்களுடைய புனித ஆட்சியிலே, இதய தெய்வம், எம்.ஜி.ஆர். அவர்களுடைய சமாதிக்குப் பின்புறமே அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்ற தகவலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தற்போது மாம்பலத்திலே இருக்கக்கூடிய புரட்சித் தலைவர் அவர்களுடைய நினைவிடத்தில் இருக்கக்கூடிய, வெறும் காட்சியகமாக இருந்து கொண்டிருக்கிற அதில் இருக்கக்கூடிய, முக்கியமான பொருட்களை எல்லாம் இந்த அருங்காட்சியகத்திற்கு மாற்றியமைக்கக்கூடிய திட்டம் அரசிடம் இருக்கிறதா? அதோடு மட்டுமல்லாமல், இதய தெய்வம், புரட்சித் தலைவர் சமாதிக்கும், இதய தெய்வம், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சமாதிக்கும், இடையிலே இருக்கக்கூடிய இடத்திலே இந்த அருங்காட்சியகம் அமையுமேயானால், சென்னைக்கு வரக்கூடிய பயணிகளும், பொதுமக்களும் நம்முடைய இயக்கத்தைச் சார்ந்த ஆற்றல் மறவர்களும், அத்தனை பேர்களும், ஒரே இடத்திலே இருபெரும் தலைவர்களுடைய சமாதியை தரிசித்துவிட்டு, அருங்காட்சியகத்தையும் கண்டு, அவர்களைத் துதிப்பதற்கு, போற்றுவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.**

****மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**

1995 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பது எல்லாம் அவைக்குறிப்பில் இருக்க வேண்டாம்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் பேரறிஞர் அண்ணாவினுடைய சமாதிக்கும் இதய தெய்வம், புரட்சித் தலைர், எம்.ஜி.ஆர். அவர்களுடைய சமாதிக்கும் இடையில் இருக்கக்கூடிய பரந்த நிலப்பரப்பில் இந்த அருங்காட்சியகம் அமையுமேயானால், திராவிடப் பாரம்பரியத்தினுடைய சீர்களையும், சிறப்புக்களையும், வரக்கூடிய இளைய தலைமுறையினரும் அறிவதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தால்தான், இந்த விளக்கத்தை நான் தந்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவுலக மாமன்னர் பேறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்திற்குப் பின்புறத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கின்ற வகையிலே புகைப்படங்களைக் கொண்ட அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய நினைவிடத்திற்குப் பின்புறத்தில் உள்ள இடத்தில் அவருடைய வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கக் கூடிய புகைப்படங்களைக் கொண்ட அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட இருக்கிறது. புரட்சித் தலைவர் வாழ்ந்த காலத்தில் அவர் பயன்படுத்திய அத்துணை பொருள்களும் அந்த அருங்காட்சியகத்திலே வைக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய, டாக்டர் புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்களுடைய லட்சியங்களைக் கொண்ட அரசாகத் திகழ்கின்ற நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவியின் தலைமையின்கீழ் இயங்குகின்ற இந்த அரசு நமது திரையரங்குகளில் செய்தி மலராக வெளியிடுகின்ற அந்த செய்தி மலரில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சமாதியைக் காண்பித்து

****மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**

நம்முடைய அரசினுடைய நடவடிக்கைகளை காண்பிக்கிறோம். அத்தோடு டாக்டர் புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்களுடைய சமாதியையும் காண்பிக்க அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரைப்படமே பார்ப்பதில்லை என நான் நினைக்கின்றேன். நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டதற்கிணங்க புரட்சித் தலைவருடைய நினைவிடத்திற்குச் சென்று நம்முடைய முதலமைச்சரவர்கள் மலர் வளையம் வைப்பதைப் போலவும், அதேபோல புரட்சித் தலைவருடைய திரு உருவச் சிலைக்கு நம்முடைய முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மாலை அணிவிப்பதைப் போலவும் காட்டிவிட்டுத்தான் தமிழ்நாடு அரசின் செய்தி மலர்கள் காட்டப்படுகிறது என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். வாழ்ந்த காலத்தில், அவருடைய ஆட்சிக் காலத்தில், அவரை எதிர்த்தவர்கள், ஏசியவர்கள் இன்றையதினம் எம்.ஜி.ஆர். பாட்டையும், எம்.ஜி.ஆர். படத்தையும் போட்டு ஏற்றுக்கொள்வதில் வெற்றி பெற்றவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அவருடைய ஆட்சிக் காலத்தில் அருங்காட்சியகத்தில் வங்கக் கடலோரம் ஒரு தங்கத் தலைவனுக்கு, உலகமே பாராட்டுகின்ற அளவில், தங்கச் சிலை பிரம்மாண்டமான முறையிலே உலக அதிசயங்களில் ஒன்றாக வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? அதுமட்டுமல்லாமல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஆரம்பித்ததே புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர் அவர்கள்தான். அந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்குத் தான் எம்.ஜி.ஆர். சிலையை வைப்பதற்கு உரிமையுண்டு. வேறு யாராவது வைத்தால், அவர்கள் சிலை வைப்பதற்குத் தடை விதிப்பதற்கு அரசு தனிச் சட்டம் இயற்றுமா என்று அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கச் சிலை வைப்பதில், கோவிலில் இருக்கின்ற தங்கச் சிலையே கஷ்டப்படுகிறது. இதை வெளியில் வைத்துவிட்டோம் என்றால், அவ்வளவுதான். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம், புரட்சித் தலைவி அரசின் சார்பில்

1995 ஏப்ரல் 21]

அமைக்கப்பட இருக்கிற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய அருங்காட்சியகத்திலே புரட்சித் தலைவருடைய சிலை வைக்கப்படும். புரட்சித் தலைவரே தங்க மனம் கொண்டவர். ஆகவே எந்தச் சிலையாக இருந்தாலும் அது தங்கச் சிலையாகத்தான் கருதப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண். 395, டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

395—

ஆரம்பப்பள்ளிகளில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்

**33379—டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதியில் ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர் பணி இடங்கள் சுமார் 60 காலி இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) காலி இடங்களை நிரப்ப எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) அரசு அறியும்.

(ஆ) விரைவில் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10–55

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெண்ணாகரம் தொகுதியில், இந்தக் கேள்வி எழுப்பப்படும் போது 60 காலி இடங்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு அங்கே நூற்றுக் கணக்கிற்கு மேல் காலி இடங்கள் உள்ளன. என்னுடைய பகுதி மிகவும் மலைப்பாங்கான பகுதி. மிகவும் பின் தங்கிய பகுதி. அங்கு ஆசிரியர்கள் வந்து வேலை செய்வதற்குக் கூட அஞ்சுகின்ற ஒரு மலைப் பாங்கான பகுதி. போக்குவரத்து வசதியில்லாத பகுதி. ஆகவே அப்படிப்பட்ட பகுதிகளுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு, அல்லது